# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அறிமுகம், நோக்கம், கடமை, இலக்கு, குறிக்கோள் மற்றும் கடப்பாடுகள் | 02 - 03 |
| 2. மக்கட் தொடர்பாடற் பிரிவு | 04 |
| 3. பதிவு செய்தற் பிரிவு (சிவில் பதிவேட்டறை, தபால் பிரிவு) | 05 - 07 |
| 4. தகவல் மற்றும் தொழிநுட்பப்பிரிவு | 08 |
| 5. ஆயுதப்படைப் படைச் சேவை ஓய்வூதியப் பிரிவு | 09 - 10 |
| 6. விதவைகள்/ தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு | 11 - 17 |
| 7. கொள்கைப்பிரிவு | 18 - 19 |
| 8. சட்டப்பிரிவு | 20 - 22 |
| 9. நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு | 23 |
| 10. வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு | 24 - 25 |
| 11. அரச சேவைகள் சேமலாப நிதியம் | 26 - 30 |
| 12. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 31 - 34 |
| 13. கணக்குப் பிரிவு | 35 - 44 |
| 14. இணைப்புக்கள் | 45 - 54 |

**அறிமுகம்**

1970ஆம் ஆண்டு ஓய்வூதியத் திணைக்களம் ஆரம்பமாகியது. அதற்கு முன்னர் பொதுத் திறைசேரியின் கீழ் காணப்பட்ட ஓய்வூதியப் பிரிவும், விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உப திணைக்களமும், அரச சேவை சேமலாப நிதியமும் ஒருங்கிணைக்கப்பட்டு 1970 ஆம் ஆண்டினில் ஓய்வூதியத் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

முத்திய அரச சேவை, மாகாண அரச சேவை, ஆயுதப்படைச்சேவை, நீதித்துறை மற்றும் அமைச்சர்களின் அந்தரங்க அலுவலர் குழாம்களுக்கான பணிக்கொடை மற்றும் ஓய்வூதியங்களை வழங்குதல், அவ்வாறே விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தினை நிர்வகித்தல் செய்தல் மற்றும் அரச சேவை சேமலாப நிதியத்தினை தாபரித்துச் செல்லல் என்பன இத்திணைக்களத்திடத்தே கையளிக்கப்பட்டுள்ளன.

**நோக்கம்:**

பொருளாதார மற்றும் சமூகவியல் ரீதியில் திருப்திகரமானதோர் ஓய்வூதியர் சமூகத்தினை உருவாக்குதல்.

**கடமை:**

அரச சேவைக்காகத் தோள் கொடுத்த அதிகாரிகளின் சேவை முடிவு அனுகூலங்களை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களின் ஓய்வின் பின்னரான வாழ்வு நிலையினை மேம்படுத்தல் மற்றும் அதனைக் கொண்டு நடாத்தத் தேவையான உயிரோட்டமுள்ள பங்களிப்பினை நிதமும் பெற்றுக்கொடுத்தல்.

**இலக்கு:**

அரச அதிகாரிகளின் ஓய்வூதியம் பற்றிய கொள்கைகளை வகுத்தல் மற்றும் அவற்றினை வினைத்திறனாகச் செயற்படுத்துவதன் மூலம் அரச அலுவலர்களுக்கு, அவர்களின் துணைவர்களுக்கு மற்றும் தங்கி வாழ்வோருக்கு எதிர்காலப் பாதுகாப்பினை ஏற்படுத்துதல் போன்றே நலன்களை உறுதிப்படுத்துதல்.

**குறிக்கோள் மற்றும் கடப்பாடுகள்**

- ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசு, மாகாண சபைகள், ஆயுதப்படைச் சேவை அதிகாரிகளுக்கான ஓய்வூதியக் கொள்கைகளை வகுத்தல் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட ஓய்வூதியக் உரித்துக்களை வழங்குதல்.
- அரச அதிகாரிகளின் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைப் பிள்ளைகள் தொடர்பில் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.
- ஓய்வூதிய உரித்தற்ற, மாதாந்த ஊதியம் பெறும் அரச அலுவலர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்தினைச் செயற்படுத்துதல்.
- உள்ளூராட்சிச் சேவை அலுவலர்களின் விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைப் பிள்ளைகளுக்காக உள்ளூராட்சிச் சேவை விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.
- தேசிய, மாவட்ட மற்றும் பிராந்திய மட்டத்தில் ஓய்வூதியம் வழங்குதல், நிர்வகித்தல் மற்றும் இணைப்பீடுகளை மேற்கொள்ளுதல்.
- ஓய்வூதியர்ச் சங்கங்களை முதற்கொண்டு குடியியல் சமூகத்துடன் தொடர்புகளைப் பேணுதல்.

இந்நோக்கங்கள் மற்றும் கடப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஓய்வூதியத் திணைக்களம் கீழ் வரும் பிரிவுகளின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்கின்து.

மக்கள் தொடர்பாடற் பிரிவு

ஓய்வூதியர் சமூகத்துடன் சிறந்ததோர் தொடர்பினைக் கொண்டு நடாத்துவதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- உட்பிரவேசிப்பு அலுவலகத்தினைப் பராமரித்துச் செல்லுதல்.
- 1970 குறுந்தொலைபேசிச் சேவையினைப் பராமரித்துச் செல்லுதல்.
- ஓய்வூதியர்ச் சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்ளுதல்.
- www.pensions.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் தொடர்புபடுவதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துதல்.
- தமது பிரதேச செயலகங்களிடத்தே சிக்கல்களைச் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தினைப் பெற்றுக் கொடுத்தல்.
- இ ஓய்வூதியக் கருத்திட்டத்தின் கீழ் வினவல் முகாமைத்துவத்திற்கான புறம்பானதோர் செயற்பாட்டினை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

1. 2012 ஆம் ஆண்டினில் திணைக்களத்திடத்தே வருகை தந்த சேவைதாரர்கள் 33591 பேரினில் திங்கள் மற்றும் புதன் கிழமைகள் தவிர்ந்த தினங்களில் சமூகமளித்த சேவைதாரர்களின் வினவல்களுக்கு உட்பிரவேசிப்பு அலுவலகத்திலேயே பதில்களை வழங்குதல் மற்றும் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் சமூகமளிக்கும் சேவைதாரர்களுக்குத் திணைக்களத்தின் குறித்த அதிகாரிகளைச் சந்திப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

2. 2012 ஆம் ஆண்டினில் 1970 குறுந்தொலைபேசிச் சேவையினூடாகச் சமர்ப்பிக்கப்பட்ட 33533 வினவல்களுக்குப் பதிலளித்தல்.

3. பதிவு செய்யப்பட்ட ஓய்வூதியர் சங்கக் கோவைகள் 381 இனை மற்றும் சங்கங்களின் பெயர்ப்பட்டியலினைப் பராமரித்துச் செல்லுதல், சங்கங்களுடன் சிறந்ததோர் தொடர்பினைக் கொண்டு நடாத்துதல்.

4. சேவைதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 265 வினவற் கடிதங்களுக்கு பதில் கடிதங்களை அனுப்புதல்.

| | சேவைதாரர்கள் தொடர்புபட்ட விதம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சமூகமளித்த நபர்களினால் சமர்ப்பிக்கபட்ட வினவல்களை ஒருங்கமைத்தல். | 33591 |
| 02 | 1970 குறுந்தொலைபேசிச் சேவையினூடாகச் சமர்ப்பிக்கப்பட்ட வினவல்களை ஒருங்கமைத்தல். | 33533 |
| 03 | ஓய்வூதியர்ச் சங்கங்களின் ஒருங்கிணைப்பு | 381 |
| 04 | கடிதங்களினால் மேற்கொள்ளப்பட்ட வினவல்களுக்கான பதில்களை அனுப்புதல். | 265 |

**பதிவு செய்தற் பிரிவு**

பிரதான துறைகள்: சிவில், நீதித்துறை மற்றும் ஆயுதப்படைச் சேவைகளிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் அதிகாரிகளைப் பதிவு செய்து, நிரந்தர ஓய்வூதிய இலக்கங்களை வழங்குவதன் மூலம் நாடளாவிய ரீதியிலான ஓய்வூதிய வழங்கற் தொழிற்பாட்டினை உயிரோட்டமிகு வண்ணம் செயற்படுத்துவதற்குத் தேவையான கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்.

பிரிவின் பெறுபேறுகள்: விண்ணப்பங்களைப் பரீட்சித்து, இலக்கங்களை வழங்குதல்.




**பிரிவின் பிரதான கருமங்கள்**

- ஓய்வூதியர்களைப் பதிவு செய்தல்.
- சேவைப்பணிக்கொடை வழங்கல்களைப் பதிவு செய்தல்.
- மரணப் பணிக்கொடை வழங்கல்களைப் பதிவு செய்தல்.
- ஓய்வூதியத்தினை வழங்க முன்னர் உயிரிழக்கும் அதிகாரிகளின் பின்னுரித்தாளர்களுக்கான கொடுப்பனவுகளைப் பதிவு செய்தல்.
- மீளாய்வுக் கொடுப்பனவுகளைப் பதிவு செய்தல்.
- கொடுப்பனவு வழங்கல்களைப் பதிவு செய்தல்.
- நாளாந்தம் கிடைக்கும் தபாலினைப் பிரிவுகளிடத்தே விநியோகித்தல்.
- திணைக்களத்திலிருந்து வெளியே அனுப்பப்படும் கடிதங்களை மத்திய அஞ்சற் புரிமாற்றத்திடத்தே கையளித்தல்.
- சிவில் ஓய்வூதியக் கொடைப்பத்திரம் மற்றும் பண்முகப்படுத்தப்பட முன்னர் ஓய்வூதியக் கோவைகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லுதல்.
- அனைத்து வெளிநாட்டு ஓய்வூதியக் கோவைகளையும் களஞ்சியப்படுத்தி வைத்தல் மற்றும்
- பராமரித்துச் செல்லுதல் மற்றும் அத்தரவு மூலத்தினைக் கொண்டு நடாத்துதல்.

செயற்பாடுகளின் பரம்பல்.



**மேற்குறித்த செயற்பாட்டின் ஊடாகப் பதிவு செய்தற் பிரிவின் 2012ஆம் ஆண்டின் பெறுபேறுகள் கீழ்வருமாறு ஆகும்.**

2012 ஆம் ஆண்டினுள் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை




2012 ஆம் ஆண்டினுள் பதிவு செய்யப்பட்ட மீளாய்வு விண்ணப்பங்களின் எண்ணிக்கை



**திட்ட மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

திட்ட மற்றும் அபிவிருத்திப் பிரிவு 2012 ஆம் ஆண்டு ஓய்வூதியத் திணைக்களத்தில் நிறுவப்பட்டதுடன், கீழ்வரும் கடப்பாடுகள் இப்பிரிவிடத்தே கையளிக்கப்பட்டுள்ளன.

- தகவல் பாதுகாப்புக் கொள்கையினை நடைமுறைப்படுத்துதல்.
- திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை முகாமை செய்தல் மற்றும் நிர்வகித்தல்.
- திணைக்களத்தின் தகவல் தொழிநுட்ப வளங்களை வினைத்திறன்மிகு வண்ணம் முகாமை செய்தல் மற்றும் நிர்வகித்தல்.
- இலங்கை அரச வலையமைப்புடன் தொடர்புறும் திணைக்களக் கணினித் தொகுதியினை நிர்வகித்தல் மற்றும் அத்தொகுதியினைச் செவ்வையாகப் பராமரித்துச் செல்லுதல்.
- திணைக்களத் தரவு மூலத்தின் நிர்வாகம் மற்றும் முறையான உப பிரதிகளைப் பராமரித்துச் செல்லுதல்.
- திணைக்களத்தின் இ ஓய்வூதியக் கணிணித் தொகுதியினை நிர்வகித்தல் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான செயற்பாட்டுடன் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- இலங்கை அரச வலையமைப்பு உபகாரச் சேவை மற்றும் திணைக்களத்திற்கிடையிலான ஒருங்கிணைப்பு.
- தகவல் மற்றும் தொடர்பாடற் தொழிநுட்ப முகவர் நிறுவனத்துடனான ஒருங்கிணைப்பு.

**2012 ஆம் ஆண்டில் திட்ட மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளின் வளர்ச்சி.**

1. இ ஓய்வூதியத் திட்டத்தினை அரச நிறுவனங்களிடத்தே அறிமுகப்படுத்துதல்.

**14 மாவட்டங்களில், 182 பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்வுகள்.**

- இ ஓய்வூதியத்தினை அறிமுகப்படுத்தும் பயிற்சி நிகழ்வுகளின் எண்ணிக்கை 14
- இ ஓய்வூதியத்தின் பிரயோக வடிவிலான பயிற்சி நிகழ்வுகளின் எண்ணிக்கை 14
- பயிற்றப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 704

**06 அரச நிறுவனங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்வுகள்.**

- இ ஓய்வூதியத்தினை அறிமுகப்படுத்தும் பயிற்சி நிகழ்வுகளின் எண்ணிக்கை 06
- இ ஓய்வூதியத்தின் பிரயோக வடிவிலான பயிற்சி நிகழ்வுகளின் எண்ணிக்கை 04
- பயிற்றப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 130

**14 மாவட்டங்களில், 182 பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்வுகள்.**

- தரவுப் பரிமாற்றம் தொடர்பிலான பயிற்சி நிகழ்வுகளின் எண்ணிக்கை 25
- மேற்பார்வை மற்றும் பின்ஆராய்வு நிகழ்வுகள் 04

**ஆயுதப்படைச் சேவை ஓய்வூதியப் பிரிவு.**

ஆயுதப்படைச் சேவைப் பிரிவின் பிரதான கடப்பாடாக அமைவது சிவில், பொலிஸ் மற்றும் முப்படை அதிகாரிகளின் ஓய்வூதியத்தினை ஒழுங்கமைத்துக் கொடுப்பதாகும்.

இப்பிரிவின் மூலம் கீழ் குறிப்பிடப்படும் ஓய்வூதிய வழங்கல்களுடன் தொடர்புறும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சேவை ஓய்வூதியம்
- சேவைப் பணிக்கொடைக் கொடுப்பனவுகள்.
- நலிவுநிலை ஓய்வூதியம்.
- தங்கிவாழ்வோர் கொடுப்பனவு.
- மரணப் பணிக்கொடை.
- விசேட நட்டஈடு.
- நட்டஈட்டு ஓய்வூதியம்.
- தொண்டர் படையணிகளின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம்.
- புண்ணியாதாரக் கொடுப்பனவுகள்.
- நாளாந்த சேவை/ கருணைக் கொடுப்பனவுகள்.

**சிவில் மற்றும் நீதித்துறைச் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு இயைபாக மேற்கொள்ளப்பட்ட**

உரித்து வழங்கல்கள்.




இராணுவ ஓய்வூதிய மற்றும் பணிக்கொடைப் பிரமாணக் குறிப்பு/ விதவைகள் அனாதைகள் ஓய்வூதியச் (ஆயுதப் படையணி) சட்டத்தின் படி மேற்கொள்ளப்பட்ட உரித்து வழங்கல்கள்.



**விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு.**

“நிரந்தர ஓய்வூதிய உரித்துள்ள நியமனமொன்றினைப் பெற்றுள்ள அரச அலுவலரொருவரின் விதவைக்கு, தபுதாரனுக்கு, அனாதைப் பிள்ளைகளுக்கு மற்றும் வலது குறைந்த அனாதைப் பிள்ளைகளுக்கு பொருளாதார ரீதியில் திருப்திகரமானதோர் வாழ்வினைக் கொண்டு நடாத்துவதற்காக விதவைகள், அனாதைகள் சட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளினுள் குறித்த நலன்களை ஏற்படுத்திக் கொடுப்பது இப்பிரிவின் கடப்பாடு ஆகும்.“



**விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நலன்களை வழங்குதல் தொடர்பிலான சட்டப் பின்னனி**




| **விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்தினை வழங்குவதற்காக ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும் சட்டத் திருத்தங்கள்** | **தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத்தினை வழங்குவதற்காக ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படும் சட்டத் திருத்தங்கள்** |
|---|---|
| 1898 இலக்கம் 01 கொண்ட விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியக் கட்டளைச் சட்டம். | 1983 இலக்கம் 24 கொண்ட தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டம். |
| 1981 இலக்கம் 44 கொண்ட திருத்தச் சட்டம் | 1985 இலக்கம் 19 கொண்ட (திருத்தச்) சட்டம் |
| 1998 இலக்கம் 57 கொண்ட திருத்தச் சட்டம் | 1997 இலக்கம் 16 கொண்ட (திருத்தச்) சட்டம் |
| 1998 இலக்கம் 64 கொண்ட திருத்தச் சட்டம் | 1998 இலக்கம் 56 கொண்ட திருத்தச் சட்டம் |
| 2010 இலக்கம் 08 கொண்ட திருத்தச் சட்டம் | 1998 இலக்கம் 65 கொண்ட திருத்தச் சட்டம் |
| | 2001 இலக்கம் 02 கொண்ட திருத்தச் சட்டம் |
| | 2010 இலக்கம் 09 கொண்ட திருத்தச் சட்டம் |

**பிரிவின் கடப்பாடுகள்**

- நிரந்தர ஓய்வூதியம் கொண்ட அரச அலுவலர்களை விதவைகள்/ தபுதாரர் மற்றும் அன ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் பதிவு செய்தல்.
- குடிசார் விதவைகள் கோவைகளைச் செவ்வையாக்குதல்.
- பங்களிப்புப் பணச் சேகரிப்பு மற்றும் மீளளிப்பு நடவடிக்கைகள்.
- குடிசார் மற்றும் உள்ளூராட்சி அனாதைகள் சிக்கல்களைத் தீர்த்தல்.
- குடிசார் மற்றும் உள்ளூராட்சி வலது குறைந்தோர் ஓய்வூதிய நடவடிக்கைகள்.
- குடிசார் மற்றும் உள்ளூராட்சி விதவைகள் கோவைகளை கொடுப்பனவுகளுக்காக வேண்டிப் செயலகங்களிடத்தே அனுப்புதல்.
- விதவைகள்/தபுதாரர் மற்றும் அனாதைகள் கோவைகளை பதிவேட்டறைப்படுத்தல்.
- உள்ளூராட்சி ஓய்வூதியக் கோவை இலக்கங்களை குடிசார் ஓய்வூதிய இலக்கங்களுக்கு மாற்றுதல்
- முப்படை (நிரந்தர) அதிகாரிகளின் சிக்கல்கள் கொண்ட விதவைகள் அனாதைகள் நடவடிக்கைகள்.

விதவைகள் அனாதைகள் பிரிவுடன் தொடர்புறும் நிதியங்களின் முகாமைத்துவம

**விதவைகள்/தபுதாரர் அனாதைகள் அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொடுத்தல்.**

| | **ஆண்டு 2011** | **ஆண்டு 2012** |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் அங்கத்தவர் எண்ணிக்கை | 999,627 | 1,045,118 |
| வருடத்தினுள் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர் எண்ணிக்கை | 53541 | 37913 |
| வருட இறுதியாகுகையில் அங்கத்தவர் எண்ணிக்கை | 1,045,168 | 1,077,081 |

அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொடுக்கையில், திணைக்களம் மற்றும் அமைச்சுக்களிடமிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியில் நடமாடும் சேவைகளை நடாத்துவதன் மூலமாகவும் துரித பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவை பற்றிய விபரங்கள் கீழ் காட்டப்படுகின்றன.

| **நடமாடும் சேவை நடாத்தப்பட்ட இடம்** | **பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|
| தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 2012 | 141 |
| வலயக் கல்விப் பணிமனை, நுவரெலியா | 881 |
| ஊவா மாகாணக் கல்வி, ஹாலியெல | 886 |
| பொலிஸ் திணைக்களம், தென் மாகாணம் | 887 |
| பொலிஸ் திணைக்களம், மத்திய மாகாணம் | 1004 |
| பொலிஸ் திணைக்களம், ஊவா மாகாணம் | 850 |
| பொலிஸ் திணைக்களம், வட மாகாணம் | 666 |
| வலயக் கல்விப் பணிமனை, கம்பஹா | 384 |
| முழு மொத்தம். | 5699 |

**பங்களிப்புப் பணச் சேகரிப்பு**

அரச அலுவலர்களின் ஊதியத்திலிருந்து 6% மற்றும் 7% எனும் அளவுகளில் அறவிடப்படும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் தொகைகளைக் கீழ்வரும் வண்ணம் சேகரித்து திணைக்கள வருமானக் கணக்குகளில் பராமரித்துச் செல்லுதல்.

**2012 ஆம் ஆண்டில் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புப் பணச் சேகரிப்புக்கள்.**

| | | |
|---|---|---|
| மத்திய அரச வருமானம் | 8335.77 | மில்லியன் ரூபாய்கள் |
| மாகாண சபை வருமானம் | 3405.14 | மில்லியன் ரூபாய்கள் |
| **சேகரிக்கப்பட்ட மொத்த தொகை** | 11,740.97 | மில்லியன் ரூபாய்கள் |



ஓய்வூதியப் பணிக்கொடைகள் மற்றும் மரணப்பணிக்கொடைகளை வழங்குவதற்கான கட்டுநிதியாக இவ்வருடத்தினுள் விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகை 3441 மில்லியன் ரூபாய்களாவதுடன், பங்களிப்புத் தொகை மீளளிப்புக்களுக்காக 139 மில்லியன் ரூபாய்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

**பங்களிப்புப் பண உபயோகிப்பு (மில்லியன் ரூபாய்கள்)**




31-12-2012 ஆந் திகதியில் ஆசிரிய விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புறும் முதலீடுகள்.

| | | 31-12-2012 ஆந் திகதியில் முதலீடுகளின் மிகுதி. |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கி | ரூபாய்கள் | 2,397, 590.00 |
| தேசிய சேமிப்பு வங்கி | ரூபாய்கள் | 427,180,446.03 |
| | | 429,578,036.03 |

**ஆசிரிய விதவைகள் அனாதைகள் நிதிய முதலீடுகள்**



**வலது குறைந்த பிள்ளைகளுக்கான ஓய்வூதிய வழங்கல்.**

“சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் மருத்துவ அதிகாரிகள் மூவரடங்கிய பரீட்சிப்புச் சபையொன்றினால் அனாதைப் பிள்ளையொன்றிற்குத் தனது வாழ்வாதாரத்தினை ஏற்படுத்திக் கொள்ள முடியா வண்ணமோர் உடலியல் அல்லது உளவியல் ரீதியிலான குறைபாடொன்றினால் பீடிக்கப்பட்டுள்ளார் எனத் தீர்மானிக்கப்படுகையில், அவ்வனாதைப் பிள்ளைக்கு வயதினைக் கருத்திற் கொள்ளாது ஆயுட்கால ஓய்வூதியமொன்றினை வழங்குவதற்கான ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.”

**கொடுப்பனவுச் செயற்பாடு.**

**வலது குறைந்தோர் ஓய்வூதிய விண்ணப்பதாரிகள்**

**விண்ணப்பம்**

**பிரதேச செயலகம்**



**ஆரம்பப் பரீட்சிப்பு அறிக்கை மற்றும் அது தொடர்பிலான பிரதேச செயலாளர் விதந்துரைப்பு**

විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

**மருத்துவச் சபை**

**மருத்துவச் சபை அங்கீகாரம் பெற்ற**




**நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள்**

**ஓய்வூதியத் திணைக்கள அங்கீகாரம்**



**கொடுப்பனவுகளுக்காக கோவையினைப் பிரதேச செயலகத்திடத்தே அனுப்புதல்.**

## விதவைகள்/ தபுதாரர் கோவைகளின் முகாமைத்துவம்.

| செயற்பாடு | வருடத்தினுள் முற்றுப்பெற்ற கோவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| விதவைகள்/ தபுதாரர் கோவைகளைச் செவ்வையாக்குதல். | 23589 |
| சிவில் மற்றும் உள்ளூராட்சி விதவைகள், தபுதாரர், அனாதைகள் சிக்கல்களைத் தீர்த்தல். | 1010 |
| விதவைகள்/ தபுதாரர் கோவைகளைப் பிரதேச செயலகங்களிடத்தே அனுப்புதல். | 5976 |
| விதவைகள்/ தபுதாரர் அனாதைகள் கோவைகளைத் தயாரித்துப் பதிவேட்டறைப்படுத்தல். | 63600 |

**கொள்கைப் பிரிவு**

அரச ஓய்வூதியர் சமூகத்திடத்தே ஓய்வூதியத்தினை வழங்குவதற்காக இயற்றப்பட்டுள்ள கொள்கை ரீதியிலான விடயங்களை வரைவிலக்கணப்படுத்தல், சந்தர்ப்பத்திற்கேற்ப அவ்வாறு காணப்படும் கொள்கை ரீதியிலான விடயங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் புதிய கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்கு வருதல் என்பன இப்பிரிவின் பிரதான கடப்பாடாகும். மேலும் அரச ஓய்வூதியர்களின் ஓய்வூதியத்தினை அண்ணளவாக நியாயமானதோர் அளவில் தாபரித்துச் செல்வதற்குத் தேவையான பின்னனியை உருவாக்குதலும் முக்கியமானதோர் பொறுப்பாகும்.

**அடிப்படைச் செயற்பாடுகள்.**

- இயற்றப்படும் திருத்தங்களுடன் தொடர்புறும் ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிருபங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல்.
- ஓய்வூதியர் சமூகத்தினால் தனிப்பட்ட ரீதியில் மற்றும் அரச நிறுவன மட்டத்தில் முன் வைக்கப்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகத் தேவைப்படும் விளக்கங்கள் / அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- மொத்த ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டினை கொண்டு நடாத்துகையில் தொடர்புறும் அனைத்துச் சட்டதிட்டங்கள், சுற்றுநிருபங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள் போன்ற ஆவணங்கள் உள்ளடங்கிய தகவற் தொகுதியினை செவ்வையாகப் பராமரித்துச் செல்லுதல்.

**2012 ஆம் ஆண்டினில் வெளியிடப்பட்டுள்ள ஓய்வூதியச் சுற்றுநிருபங்கள்.**

| | வெளியிடப்பட்ட திகதி | சுற்றுநிருப இலக்கம் | விடயம் |
|---|---|---|---|
| 01 | 03-02-2012 | 10/2011 (திருத்தம் I) | 2011 வரவு செலவுத்திட்ட யோசனைகளின் அடிப்படையில் அரச துறையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மீளாய்வு செய்தல். |
| 02 | 06-02-2012 | 09/2004 (திருத்தம் III) | ஓய்வூதியக் கொடை அளிப்பு மற்றும் மாற்றப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் புதிய செயல்முறை. |
| 03 | 08-02-2012 | 01/2012 | உள்ளூராட்சி ஓய்வூதிய மாதாந்தக் கொடுப்பனவு ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் கோவைகளின் பொறுப்பினை பிரதேச செயலகங்களிடத்தே பண்முகப்படுத்தல். |
| 04 | 29-02-2012 | 02/2012 | தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான விருப்பினைத் தெரிவித்தல் / விதவைகள்-தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல் / ஆயுதப்படைச் சேவை தொண்டர் படையணி அங்கத்தவர்களுக்கு விதவைகள் / தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பங்களிப்பதற்கான கால எல்லையினை நீடித்தல். |
| 05 | 24-05-2012 | 03/2012 | ஓய்வூதிய இலக்கங்களை வெளியிடுதல் (12 ஆம் இலக்க இலட்சத் தொகுதி ஆரம்பமாதல்). |
| 06 | 28-05-2012 | 10/2011 (திருத்தம் II) | 2011 வரவு செலவுத்திட்ட யோசனைகளின் அடிப்படையில் அரச துறையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மீளாய்வு செய்தல். |
| 07 | 22-06-2012 | 06/2011 (திருத்தம் 1) | ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் “ட” உப அட்டவணையினை வரைவிலக்கணப்படுத்தல். |
| 08 | 25-07-2012 | சுற்றுநிருபக் கடிதம் 04 | மாகாண அரச சேவையில் உள்ளீர்க்கப்பட்ட அதிகாரிகளுக்கு ஓய்வூதிய/ விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய உரித்தினை வழங்குதல். |

**சட்டப் பிரிவு.**

ஓய்வூதியத் திணைக்களத்தின் கடப்பாடுகளை ஆற்றுகையில் எழுகின்ற சிக்கல்களுக்காகச் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தினை உத்தரவுதாரர்களாக்கிச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பிலான அவதானிப்புக்களை வழங்குவதற்காகச் சட்டப்பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

**ஆற்றப்படும் செயற்பாடுகள்.**

- திணைக்களம் தொடர்பில் காணப்படும் அனைத்துச் சட்டவியல் நடவடிக்கைகளுக்காகவும் வேண்டிச் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ஓய்வூதியத்துடன் தொடர்புறும் அனைத்துச் சட்டதிட்டங்களினதும் திருத்தங்களின் வரைபு நடவடிக்கைகளுக்கு உதவி புரிதல்.
- பாராளுமன்ற ஆலோனைத் தெரிவுக்குழு, மக்கள் முறைப்பாட்டுத் தெரிவுக்குழு என்பனவற்றின் மூலம் அனுப்பப்படும் சிக்கல்களுக்குப் பதில்களை வழங்குகையில் தேவைப்படும் சட்டரீதியான உதவிகளை வழங்குதல்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பிலான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்படும் மனுக்களுக்கான பதில்களை வழங்குதல் மற்றும் விசாரணைகளில் கலந்து கொள்ளுதல்.
- இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுப் புலனாய்வு ஆணைக்குழுவின் விசாரணைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் தேவையான அறிக்கைகளைத் தயாரித்தல்.
- சட்டப்பிரிவிடத்தே சமூகமளிக்கும் ஓய்வூதியர்களின் சிக்கல்களுடன் தொடர்புறும் சட்டரீதியான

**சட்டப்பிரிவுடன் தொடர்புறும் நிறுவனங்கள்.**



**கலந்து கொண்ட விசாரணைகளின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| **நீதிமன்றம்** | **18** |
| **மனித உரிமைகள்** | **45** |
| **ஒம்புட்ஸ்மன்** | **05** |
| **பாராளுமன்ற ஆலோனைத் தெரிவுக்குழு** | **05** |
| **மக்கள் முறைப்பாட்டுத் தெரிவுக்குழு** | **11** |



வெளியிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| நீதிமன்றம் | 18 |
| மனித உரிமைகள் | 79 |
| ஒம்புட்ஸ்மன் | 35 |
| பாராளுமன்ற ஆலோனைத் தெரிவுக்குழு | 17 |
| மக்கள் முறைப்பாட்டுத் தெரிவுக்குழு | 25 |
| வேறு | 50 |



**நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு**

ஓய்வூதியத் திணைக்களத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளுக்காக உயிரோட்டமிகு பங்களிப்பினை வழங்கும், நாடளாவிய ரீதியில் பரந்துள்ள, ஓய்வூதிய வழங்கற் செயற்பாடுகளுடன் தொடர்பும் ஒட்டு மொத்த அலுவலர் குழாமினதும் முகாமைத்துவம் மற்றும் பயிற்சியளிப்புக்கள் உள்ளிட்ட மானிட மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்யும் கடப்பாடு நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவிடத்தேயே கையளிக்கப்பட்டுள்ளது. அதற்காக நாடளாவிய ரீதியிலான ஓய்வூதிய வழங்கல்களை ஒழுங்காக மற்றும் வினைத்திறன்மிக்க வண்ணம் நடைமுறைப்படுத்தவதற்காக மனித வளத்தினை வழிநடாத்துதல் மற்றும் நிர்வகித்தல் போன்றன இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

**பயிற்சி வகுப்புக்கள் மற்றும் கருத்தமர்வுகளை ஒழுங்கு செய்தல்.**

ஓய்வூதிய விடயதானத்தில் இடம்பெற்ற காலத்திற்கேற்ற மாற்றங்களைக் கருத்திற் கொண்டு 2012 ஆம் ஆண்டினுள்ளும் ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் அரச நிறுவனங்களின் அதிகாரிகளை அறிவூட்டுவதற்கான பயிற்சிக் கருத்தமர்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. முன்னைய வருடங்களிலான பயிற்சிக் கருத்தமர்வுகள் மூலம் பெறப்பட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு புது வடிவமைப்பில் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் மூலம் சிறந்ததோர் வினைத்திறனினை ஓய்வூதியத்தினைத் தயாரிக்கையில் மற்றும் வழங்குகையில் அரச நிறுவனங்களினுள் விருத்தியடையச் செய்த வண்ணம் அதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்கு 2012 ஆம் ஆண்டிலும் வாய்ப்பேற்பட்டது. இவ்வளர்ச்சியானது கொழும்பு மாவட்டம் உள்ளடங்கலாகத் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலான நிலையில் காணப்பட்டது. பயிற்சி நிகழ்வுகளில் காணப்படும் வெற்றியானது அவற்றுக்காகக் கிடைக்கும் விண்ணப்பங்களின் மூலம் நிரூபணமாகின்றது. இவ்விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகள் அதிவிசேடமானதோர் பங்களிப்பினை வழங்கினார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.

2012 ஆம் ஆண்டினில் 73 நாட்கள் பூராக 34 கருத்தமர்வுகளை நடாத்திய வண்ணம் அந்நிறுவனங்களின் அதிகாரிகள் சுமார் 2000 பேரிடத்தே ஓய்வூதிய விடயதானத்துடன் தொடர்புறும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே அரச சேவைகள் பயிற்சி நிறுவனத்தின் மூலம் அவ்வருடம் பூராவும் ஒழுங்கு செய்யப்பட்ட ஓய்வூதியப் பயிற்சிக் கருத்தமர்வுகளுக்காக வளவாளர்களை ஈடுபடுத்துதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு**

**நோக்கம்.**

வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஓய்வூதியர்களின் ஒய்வூதியம், விதவைகள் அனாதைகள் ஓய்வூதியம் என்பனவற்றினை மிகச்சரியான முறையில் கொடுப்பனவு செய்தல்.

**கடப்பாடு**

- பல்வேறு நாடுகளில் வசிக்கும் இலங்கை ஓய்வூதியர்களின் ஒய்வூதியம், விதவைகள் அனாதைகள் ஓய்வூதியங்களை வழங்குதல் மற்றும் செவ்வைப்படுத்தும் நடவடிக்கைகள்.
- தூதுவர் சபை அலுவலகமொன்றினது உத்தரவு பெற்ற அதிகாரியொருவரால் உறுதிப்படுத்தப்பட்ட வருடாந்த உயிர்வாழ் சான்றிதழொன்றினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் வெளிநாடு சென்றுள்ள அனைத்து ஓய்வூதியர்களினதும் மேற்குறித்த கொடுப்பனவுகள் கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, இந்தியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் அமைந்துள்ள தூதுவராலயங்கள் ஊடாக அல்லது இலங்கையில் உள்ள விசேட வங்கி அலகுகளின் (இலங்கை வங்கி - தலைநகரக் கிளை: மக்கள் வங்கி - இராணிக் கிளை: ∴பான் ஆசியா வங்கி – பொரல்லைக் கிளை) ஊடாக வழங்கப்படும்.
- வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியர்கள் மீளவும் இலங்கையில் நிரந்தர வசிப்பிற்கு வந்ததன் பின்னர் அது பற்றி உறுதிப்படுத்திக் கொண்டு அவரை இந்நாட்டில் வதியும் ஓய்வூதியராகக் கருதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக் கோவைகளைப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்புதல்.
- குறித்த சுற்றுநிருபங்களின் அடிப்படையில் ஓய்வூதிய மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஓய்வூதியர்களது ஓய்வூதியத்தினை வழங்குகையில் அவர்களுக்கு இலங்கைப் பிரசாவுரிமை அல்லது இரட்டைப் பிரசாவுரிமை இருக்க வேண்டுமென்பது அத்தியாவசியமான காரணி அல்ல. வேறோர் நாட்டினது பிரசாவுரிமையினைப் பெற்றுள்ள ஒருவராயினும் இலங்கையில் ஓய்வூதியமொன்றிற்கு உரித்துடையவராயின் அவரிடத்தே ஓய்வூதியத்தினை வழங்குழலும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் மற்றும் விசேட வங்கிக் கணக்குகள் மூலம் வழங்கப்பட்ட மொத்த ஓய்வூதியத் தொகைகள்.**

**31-12-2012 ஆந் திகதி முதல்**

| வழங்கப்பட்ட நிறுவனம் | ஓய்வூதியர்களினின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் | 2378 | 426,474,107.30 |
| விசேட வங்கிக் கணக்குகள் | 4330 | 897,127,108.75 |

மேலும் 2011 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 5/2011 கொண்ட சுற்றுநிருபத்தினைத் தொடர்ந்தும் செயற்படுத்திய வண்ணம் 2012 ஆம் ஆண்டிலும் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் ஊடாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்வதனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பெருந்தொகையிலான ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியத்தினை உள்நாட்டு வங்கிகள் மூலம் பெற்றுக்கொள்ளும் இசைவாக்கமொன்றினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

**ஓய்வூதிய வழங்கள் - 2012**



**அரச சேவைகள் சேமலாப நிதியம்.**

1942 இலக்கம் 18 கொண்ட அரச சேவைகள் சேமலாப நிதியக் கட்டளைச்சட்டத்தின் கீழ் 01-04-1942 ஆந் திகதி, மாதாந்த ஊதியம் பெறும் நிரந்தர மற்றும் ஓய்வூதிய உரித்தற்ற அரச அலுவலர்களுக்காக வேண்டிய சேவை முடிவு நிதியியல் அனுகூலங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், 2003 இலக்கம் 17 கொண்ட திருத்தச் சட்டத்தின் மூலம் நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்ந்தும் விரிவுபடுத்தப்பட்டன. நிதியத்தின் நிர்வாகம் ஐவரடங்கிய சபையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் கட்டமைப்பு கீழ்வருமாறு ஆகும்.




**நிதியத்தின் செயற்பாடுகளைக் கீழ்வருமாறு காட்ட முடியும்.**




பங்களிப்புப் பணத்திணைச் சேகரிக்கும் செயற்பாடு
சம்பளத்திலிருந்து
கட்டாயப் பங்களிப்புத்
தொகை (8%)
அமைச்சுக்கள்
திணைக்களங்கள்
உள்ளுராட்சி
நிறுவனங்'கள்
வேளிநாட்டுத்
தூதரகங்கள்
மாகாண சபைகள்
அரச நிறுவனங்கள்
காசோலைகள் மூலம்
மாதாந்தக் கணக்குகள் மூலம்
Slip முறை மூலம்
அரச சேவைகள்
சேமலாப நிதியம்
அரச உதவுத்
தொகை 12%
பொதுத் திறைசேரி


நலன்களை மீளளிக்கும் செயற்பாடு
விண்ணப்பம்
அரச
நிறுவனங்கள்
அரச சேவைகள்
சேமலாப நிதியம்
வாசகம் 14
வாசகம் 20
வாசகம் 16
குறைபாடுடையவை
அரச நிறுவனங்கள்
பங்களிப்பாளர்
வாசகம் 14:கட்டாய உதவுத்தொகை + வட்டி & அரச உதவுத் தொகை + வட்டி
வாசகம் 20:கட்டாய உதவுத்தொகை + வட்டி
வாசகம் 14:கட்டாய உதவுத்தொகை + வட்டி
குறைபாடுடையவை: கட்டாய உதவுத்தொகை

நிதியத்தின் வளங்களை முதலிடுவதன் மூலம் வருடத்தினுள் உழைத்த மொத்த வட்டி வருமானம் 2,571 மில்லியன் ரூபாய்களாவதுடன், நிதியத்தின் நிர்வாகச் செலவீனங்களான 10.7 மில்லியன் ரூபாய்களை அறவிட்டதன் பின்னர் 2,560.33 மில்லியன் ரூபாய்கள் பங்களிப்பாளர்களிடத்தே ஒதுக்கீடு செய்வதற்காக எஞ்சியதுடன், அவற்றுள் 8.6% வட்டி கிடைக்கும் வண்ணம் 2,545.49 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு எஞ்சிய தொகையான 26.9 மில்லியன் ரூபாய்கள் பொதுத் தேக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. குறித்த வருடத்தினுள் நிதியினை மீளப்பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 6997 விண்ணப்பங்களில் 98% இற்கான நலன்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.




பங்களிப்புப் பண வருமதிகள் மற்றும் மீளளிப்புக்கள் (ரூ. மில்லியன
ரூபாய் (மில்லியன்)
2,000.00
1,800.00
1,600.00
1,400.00
1,200.00
1,000.00
800.00
600.00
400.00
200.00
-
2000
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
வருடம்


2012 ஆம் ஆண்டினுள் பங்களிப்புப் பண வருமதிகள் மற்றும் மீளளிப்புக்கள்
350,000,000.00
300,000,000.00
250,000,000.00
200,000,000.00
150,000,000.00
100,000,000.00
50,000,000.00
-
சனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்பிறல்
மே
ஜூன்
ஜூலை
ஆகஸ்ட்
செப்தெம்பர்
ஒக்டோபர்
நவம்பர்
திசெம்பர்
மீளளிப்புக்கள்
பங்களிப்புப் பண வருமதிகள்


முதலீடுகள் (ரூபாய் மில்லியன்)
35,000,000,000.00
30,000,000,000.00
25,000,000,000.00
20,000,000,000.00
15,000,000,000.00
10,000,000,000.00
5,000,000,000.00
-
ரூபாய் (மில்லியன்)
2000
2001
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
வருடம்


2012 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் (ரூபாய்)
2,500,000,000.00
2,000,000,000.00
1,500,000,000.00
1,000,000,000.00
500,000,000.00
-
சனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்பிறல்
மே
ஜூன்
ஜூலை
ஆகஸ்ட்
செப்தெம்பர்
ஒக்டோபர்
நவம்பர்
திசெம்பர்
முதலீடுகள் முதிர்வடைதல்
முதலீட்டு வட்டிகள் கிடைத்தல்
புதிய முதலீடுகள்

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

ஓய்வூதியத் திணைக்களத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக வேண்டி உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு உதவி புரியும் பொருட்டு வருடாந்த மதிப்பீட்டினுள் உள்ளடங்கும் நிதி ஏற்பாடுகள் பயன் மற்றும் வினைத்திறன்மிகு வண்ணமும், சட்டவிதிமுறைகள், நீதி வரம்புகள், நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் தொடர்புறும் அரச நிறுவன வலையமைப்பினை கணக்காய்வு செய்வது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கமாகும்.




**பிரதான கடப்பாடுகள்.**

ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் ஓய்வூதியத்துடன் தொடர்புறும் நிறுவனங்களை கணக்காய்விற்கு உட்படுத்தி கணக்காய்வு வினவல்களை வழங்குதல்.

மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கையெடுத்தல்.

விசேட புலனாய்வுகள்.

ஓய்வூதியர்களது மேன்முறையீடுகள்/ வேண்டுகோள்கள் தொடர்பில் நடவடிக்கையெடுத்தல்.

சிக்கலான கோவைகள் தொடர்பிலான அறிவுறுத்தல்கள்/ அவதானிப்புக்களை வழங்குதல்.

அரச கணக்காய்வுப் பிரிவு/ அரச நிர்வாக உள்ளகக் கணக்காய்வுப பிரிவு என்பனவற்றினால் கிடைக்கும் கணக்காய்வு வினவல்களுக்கு ஓய்வூதியத் திணைக்களத்தின் குறித்த பிரிவுகளை ஒருங்கிணைத்துப் பதில்களை வழங்குதல்.

பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களத்தின் உள்ளகப் பிரிவுகளிடமிருந்து பரீட்சிப்பிற்காக மற்றும் தயாரிப்பிற்காகக் கிடைக்கும் கோவைகள் தொடர்பிலான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொடுத்தல

**ஓய்வூதியத்தினைத் தயாரித்தல் மற்றும் கொடுப்பனவு தொடர்பில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய அரச நிறுவன வலையமைப்பு.**




- ஓய்வூதியக் கணிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட வரையறைக்குட்பட்ட மனித வளத்தினை உபயோகிப்பதன் ஊடாகப் பிரதேச செயலகங்களினது ஓய்வூதியக் கணக்காய்வுகள் தொடர்பில் அதிகளவு அவதானம் செழுத்தப்பட்டது.

மொத்த பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை 330 ஆகும்.

2012 ஆம் ஆண்டில் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டவை - 109

| 2012 ஆம் ஆண்டு | பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கணக்காய்விற்கு உட்பட்ட | 109 |
| கணக்காய்விற்கு உட்படாத | 221 |
| மொத்தம் | 330 |







## ஓய்வூதியம் தொடர்பிலான கணக்காய்வுச் செயற்பாடு.



**2012 ஆம் ஆண்டின் வளர்ச்சி**

| செயற்பாடு | வளர்ச்சி |
|---|---|
| 1. கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட பிரதேச செயலகங்கள் | 109 |
| | |
| 2. ஏனைய அலுவலகங்கள் | 35 |
| | |
| 3. விசேட புலனாய்வுகள் | 04 |
| | |
| 4. பதில்கள் அனுப்பப்பட்ட கணக்காய்வு வினவல்கள் | 33 |
| | |
| 5. நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட மக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 288 |
| | |
| 6. பரீட்சிக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை | 238 |

**கணக்குப் பிரிவு**

ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதியியல் வளங்களை வினைத்திறன் மற்றும் பயன்மிகு வண்ணம் கொண்டு நடாத்துவதற்காக வேண்டி முறையானதோர் செயல்முறையினைப் பின்பற்றிய வண்ணம் நிறுவனத்தினது குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான பங்களிப்பினை வழங்குவது இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

இக்கடப்பாடுகள் கணக்குப் பிரிவின் நான்கு அலகுகளினால் நிறைவேற்றப்படுகின்றன.




**01. கணக்கு அலகு**

- வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- வினைத்திறன்மிகு நிதி முகாமையொன்றிற்குத் தேவையான திட்டங்களை வகுத்தல் மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்துதல்.
- ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்துக் கொடுப்பனவகளுக்கும் தேவையான கட்டுநிதியினைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பிரதேச செயலகங்களுக்கு ஓய்வூதியம் வழங்கத் தேவைப்படும் நிதி எற்பாடு மற்றும் கட்டுநிதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் பின் விவரண நடவடிக்கைகள்.
- வருடாந்தப் பொருட் கணிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.
- அரச கணக்கீட்டுடன் தொடர்புறும் திணைக்களத் தரவுகளை மாதாந்தம் திறைசேரியிடத்தே அறிக்கையிடல் மற்றும் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் உள்ளிட்ட அனைத்துக் கணக்குகளையும் சமர்ப்பித்தல்.

**2012 ஆம் ஆண்டின் நிதியியற் தகவல்கள் மற்றும் வளர்ச்சி**

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஏற்பாடுகள் திட்டங்களின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ள விதம் கீழ்வருமாறு ஆகும்.

| | ரூ. |
|---|---|
| பொது நிர்வாகம் | 78,286,645.00 |
| ஓய்வூதியத்தினை நடைமுறைப்படுத்துதல் | 126,727,152,155.00 |
| | **126,805,438,800.00** |

மேற்குறித்த நிதி ஏற்பாடு நிதியிடப்பட்டுள்ள விதம்,

| | |
|---|---|
